DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO.35/19 | Crime No.:56/19 | Police Station :BHAVANI |
| PW : 11 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராஜன் | Caste | |
| Father Name | குழந்தைவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 59 |

| | |
|---|---|
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | 02.05.2022 |

**முதல் விசாரணை -**

நான் தற்போது பவானி போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.02.19 அன்று மாலை 17.30 மணிக்கு நான் பவானி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, பவானி அரசு மருத்துவமனையிலிருந்து வரபெற்ற இருசா த/பெ.தொப்பநல்லாகவுண்டர் என்பவரது அசால்ட் இன்டிமேஷனை பெற்று அன்றைய தினம் 17.45 மணிக்கு பவானி அரசு மருத்துவமனை சென்று மேற்படி இருசா என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 18.30 மணிக்கு நிலையம் வந்து, நிலைய குற்ற எண்.56/19, இ.த.ச பிரிவுகள் 294(பி),324,506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யபடுகிறது. பின்னர், முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் வாக்குமூலத்தையும் மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 பவானி அவர்களுக்கும், இதர நகல்களை புலன்விசாரணைக்காக சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் கொடுத்த நபர் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறார் என்கிற விவரத்தை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரில் என்ன கல் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்ததை அவர் கொடுத்த புகாரில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரிகள் புகார்தாரரை பொது இடத்தில் திட்டவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கொலைமிரட்டல் செய்ததால், தனக்கு உயிர்பயம் இருப்பதாகவும், தனக்கு பாதுகாப்பு வேண்டும் என்பதாகவும்,புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், புகார் வாக்குமூலத்தை பெற்று, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.